அ.வ.எண். 122/2024 நாள்: 23.02.2026

வா.சா.1 திரு. ஆரோக்கியராஜ்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன், யாருடைய வாரிசு என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்தோணிசாமிக்கு வாரிசு என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்தோணிசாமி எனக்கு என்ன உறவு என்றால் பெரியப்பா ஆவார். அந்தோணிசாமிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. அந்தோணிசாமியின் மனைவி மற்றும் குழந்தைகள் விவரம் சொல்லமுடியுமா என்றால் அந்தோணிசாமியின் மனைவி பெயர் ஆரோக்கியமேரி ஆகும் அவருக்கு குழந்தைகள் எதுவும் இல்லை. அந்தோணிசாமி–ஆரோக்கியமேரி தம்பதி குழந்தை ஏதாவது தத்தெடுத்து கொண்டார்களா என்றால் இல்லை.

2) அந்தோணிசாமியுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 பேர் ஆவர், 1. செல்வராஜ், 2. அல்போன்ஸ்மேரி. அந்தோணிசாமி எப்போது, எங்கு இறந்தார் என்றால் 2021–ல் வீட்டில் இறந்தார். அந்தோணிசாமியின் மனைவி ஆரோக்கியமேரி எப்போது இறந்தார் என்றால் 2015–ல் இறந்துவிட்டார், அவரும் வீட்டிலேயே இறந்துவிட்டார். இறந்துபோன அந்தோணிசாமிக்கு நான் நேரடி வாரிசு இல்லை என்பதால்தான் வாரிசு சான்று கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேலும் அரசுக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு முன் கொடுக்கப்பட வேண்டிய இரண்டுமாத கால அவகாசம் கொடுக்கப்படாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Arockiaraj

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.23 14:57:43 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU